# சங்க இலக்கிய நூல்களில் காணப்படும் விலங்கினச் சிந்தனைகள்

**சு.கோபாலகிருஷ்ணன்**
**முதுகலைத் தமிழாசிரியர், அரசினர் மேல்நிலைப்பள்ளி**
**கருவாக்குறிச்சி, மன்னார்குடி தாலுக்கா**
**திருவாரூர் மாவட்டம்**
**மின்னஞ்சல்: akshyaakshya85@gmail.com**

4

**ஆய்வுச் சுருக்கம்:**

இலக்கியம் என்பது வெறும் இரசனைக்குரிய ஒன்றாக மட்டும் இல்லாமல் அனுபவமும் அறிவியலும் கலந்த ஒன்றாகவே புலவர்கள் படைத்துள்ளனர். அறிவியல் அடிப்படையில் தன் வாழ்வுச் சக்கரத்தை நகர்த்திய தமிழன் தன் அறிவியல் சிந்தனைகளைத் தமிழில் பதிவு செய்து வைக்க தவறவில்லை. சங்கப் புலவர்கள் மொழிப் புலமையோடு விலங்கியல், செடிகொடியியல், வானியல் போன்ற பல இயல்களிலும் சிறந்து விளங்கினர் என்பதை சங்கஇலக்கிய பாடல்கள் விளக்குகின்றனர். இன்றைய அறிவியல் அறிஞர்கள் ஆய்வு செய்து கண்டுபிடிக்கும் உண்மைகள் அனைத்தும் சங்ககாலத்தில் இலக்கியங்களில் கூறப்படும் கருத்துகளோடு ஒத்துப்போகின்றன. ஐவகை நிலத்திலும், நீரிலும் வாழ்ந்த விலங்குகளை உற்றுநோக்கி அவற்றின் செயல்பாடுகளையும் இயல்புகளையும் நன்கு அறிந்து தங்களது பாடல்களில் உவமையாவும், வர்ணனையாகவும் சங்கப் புலவர்கள் அமைத்துள்ளனர். சங்கஇலக்கிய நூல்களில் காணப்படும் விலங்கினங்கள் சம்பந்தமான கூற்றுகள் இன்றைய விலங்கியல் அறிஞர்கள் கூறும் கருத்துகளோடு ஒத்துப்போவதை இக்கட்டுரையில் காணலாம்.

**திறவுச் சொற்கள்:**

மான் கொம்பு, நாரையின் தூவி, குரங்கு, செந்நாய், யானை, புலிகள் தொடர்பான செய்திகள்.

**முன்னுரை:**

தமிழன்னையின் தலைசிறந்த அணிகலன்களாகத் திகழ்வன சங்கஇலக்கிய நூல்களாகும். சங்கஇலக்கியப் பாடல்கள் வெறும் படைப்புத் திறனை மட்டும் கொண்டிருக்கவில்லை. இயற்கையில் சங்கப் புலவர்கள் தாங்கள் கண்ட நுட்பமான உண்மைகளைக் கணிதம், இயற்பியல், வேதியியல், தாவரவியல், விலங்கியல், மருத்துவம், வேளாண்மை, பொறியியல், வானவியல் ஆகிய இன்றைய அறிவியலின் பல வகைகளைப் பாடல்களாக எழுதி வைத்துள்ளனர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் சங்ககாலப் புலவர்கள் கூறியுள்ள அறிவியல் உண்மைகள் இன்றைய அறிவியல் உலகம் கூறும் கருத்துக்களை ஒத்து உள்ளன. சங்ககாலப் புலவர்கள் இலக்கியத்தில் அறிவியலையும் கலந்து கூறினர் என்றால் மிகையாகாது.

சங்க இலக்கியத்தில் இயற்கையில் காணப்படும் விலங்குகள், பறவைகள், மரம், செடி, கொடிகள் முதலிய பல்லுயிர்களைப் பற்றியும் பல அரிய, பெரிய, நுண்ணிய அறிவியல் செய்திகள் காணப்படுகின்றன. மற்ற எந்த மொழி இலக்கியத்திலும் இத்தகைய அறிவியல் செய்திகள்

காணப்படுவதில்லை. சங்கஇலக்கியத்தில் வரும் அறிவியல் செய்திகள் உவமையாகவும், உள்ளுறையாகவும் நிகழ்ச்சிக்கு நிலைக்களனாக, கருப்பொருளாக வருகின்றன. அறிவியல் செய்திகளை நுண்ணிய உணர்வினால் ஐந்திணைப் பாகுபாட்டிற்கு உட்படுத்தி, ஐந்து வகை நிலங்களிலும் சூழ்நிலைகளிலும் நடைபெறுவதாகப் புலவர்கள் கூறியுள்ளனர். வேற்று மொழிகளில் இதைக் காண இயலாது. சங்கப் புலவர்கள் இயற்கையின் மீது கொன்டிருந்த ஈடுபாட்டு உணர்வும், நுண்ணிய அறிவும், கல்வி அறிவுமே இவ்வாறான பாடல்களைப் பாட வழி வகுத்தது.. சங்கஇலக்கியத்தில் முப்பதுக்கும் மிகுதியான விலங்கினங்களைப் பற்றி கூறப்பட்டுள்ளது. சில சங்கப் பாடல்களில் மரம், விலங்கு ஆகியவற்றின் முழு விளக்கம் கூறப்பட்டிருப்பதைப் பார்த்தால் அது கவிதையா அல்லது அறிவியலா என்று சந்தேகம் ஏற்படுகிறது. இன்றைய விலங்கியல் அறிஞர்கள் புலவர்கள் அல்லர். ஆனால் அன்றைய புலவர் பெருமக்கள் விலங்கியல் பற்றிய உண்மைகளை நன்கு அறிந்து வைத்திருந்தனர். ஒவ்வொரு விலங்கைப் பற்றியும் பழந்தமிழ் புலவர்கள் அளிக்கும் விளக்கம், அவற்றின் பழக்க வழக்கங்கள், ஊன் முதலியன இக்கால விலங்கியல் வல்லுநர்களின் விளக்கங்களோடு ஒத்துள்ளன.

**சங்கஇலக்கியத்தில் செந்நாய் பற்றிய கூற்றுகள்:**

வீட்டு நாயைப்போலக் காணப்படும் செந்நாயின் கூரிய பற்களைக் கொண்டு மான் முதலிய விலங்குகளின் தோல்களைக் கவ்விக் கிழித்துவிடும் என்று விலங்கியல் அறிஞர்கள் கூறுகின்றனர்.

**அரந்தின் ஊசித் திரள்நுதி அன்னத்**
**தினநிலை எயிற்ற செந்நாய் எடுத்தலின்** (அகம் 199)

அரத்தால் தீட்டப்பட்ட இரும்பு ஊசிகளைத் திரளாக வைத்தாற் போன்ற திண்மையான நிலையையுடைய பற்களைக் கொண்ட செந்நாய் என்று அகநானூநூற்றில் கூறப்பட்டுள்ளது. செந்நாய்களுக்கு மிகவும் வலிமை பொருந்திய பற்கள் உண்டு என்று இக்கால அறிவியல் அறிஞர்களும் கூறுகின்றனர். செந்நாய்கள் கூட்டமாகச் சேர்ந்து வேட்டையாடும் தனித்துவமான தன்மையைக் கொண்டுள்ளது என்று அறிவியலார் கூறுவர். இதனால் அதன் வலிமை மிகுதியாக இருக்கும். புலி, கரடி, சிறுத்தை போன்ற கொடிய விலங்குகளைக்கூட செந்நாய் கூட்டம் கொன்று தின்று விடும்.

**புலிப்போத் தன்ன புல்லன்ற் காளை**
**செந்நா யன்ன கருவிற் சுற்றமொடு**
**கேளா மன்னர் கடிபுலம் புக்கு**
**நாளா தந்து நறவுநொடை தொலைச்சி** (பெரும் 138-141)

செந்நாய்கள் கூட்டமாக சேர்ந்து வேட்டையடும் குணமுடையது என்று பெரும்பாணாற்றுப்படையில் புலவர் உவமை கலந்து பாடியுள்ளார்.

செந்நாய்கள் காட்டுப்பன்றியையும், புள்ளிமான்களையும், கடமான்களையும் கொல்வதாகச் சங்கப்பாடல்களில் கூறப்பட்டுள்ளது. விலங்கு நூலாரும் செந்நாய்கள் இவ்விலங்குகளையே பெரும்பாலும் கொன்று உண்பதாகக் கூறுகின்றனர். காட்டில் வாழும் செந்நாய்கள் பற்றி சங்ககாலப் புலவர்கள் கூறியுள்ள பல்வேறு கருத்துக்கள் தற்கால விலங்கு நூலறிஞர்கள் கருத்துக்களோடு ஒத்திருப்பதைக் கண்ட எவரும் சங்ககாலப் புலவர்களின் நுண்ணிய அறிவையும், அதை எடுத்துக் கூறிய திறத்தையும் போற்றாதிருக்க முடியாது.

**சங்கஇலக்கியத்தில் மான்கொம்பு பற்றிய செய்திகள்:**

சங்க இலக்கியங்களில் ஐந்து வகையான மான்கள் பற்றிய செய்திகள் கூறப் பட்டுள்ளன. அவை இரலி, நவ்வி, மரையான், உழை, கடமா என்பனவாம். அகநானூறு 151ஆம் பாடலில் கலைமானின் தலையில் முதன் முதலாகக் கவையுடன் கொம்பு முளைப்பதும், பிறகு கொம்பு முதிர முதிர புதிய கிளைகள் கொம்பில் தோன்றிக் கவை கவையாக கிளைவிட்டுக் காணப்படும் என்று கீழ்க்காணும் பாடலில் கூறப்பட்டுள்ளது.

**கலைமான் தலையின் முதன்முதல் கவர்த்த**
**கோடல் அம் கவற்ற குறுங்கால் உறிஞ்சில்**

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சங்கஇலக்கியத்தில் புலவர்கள் எழுதியிருப்பது விந்தையாக உள்ளது. முதிர்ந்த கொம்புகளைக் கலைமான் உதிர்த்து விடுகிறது என்பதைக் கீழ்க்காணும் பாடல்கள் உணர்த்துகின்றன.

**இறுகுபுல் மேய்ந்த அறுகோட்டு முற்றல்**
**அள்ளல் ஆடிய புள்ளி வரிக்கலை** (நற்றிணை 265)

**கள்ளிஅம் காட்ட புள்ளியம் பொறிக் கலை**
**வறன்உறல் அம்கோடு உதிர வலங் கடந்து**
**புலவுப்புலி துறந்த கலவுக்கழி கடுமுடை** (அகம் 97)

உதிர்ந்த முற்றிய கொம்பை 'அறுகோட்டு முற்றல்' என்று நற்றிணை அழைக்கிறது. கலைமானிற்கு அதனுடைய கொம்பே புலியிடமிருந்து தன்னைக் காப்பாற்றிக்கொள்ள உதவுகிறது. வறண்ட கொம்பு உதிரவே கலைமானை எளிதில் வென்று புலி கொன்றதாக அகநானூறு கூறுகின்றது.

கொம்புகள் உதிர்ந்ததும் புதிய கொம்புகள் முளைக்கும். அப்போது அக்கொம்புகள் மென்மையான தோலால் மூடப்பட்டிருக்கும். இச்செய்தி கீழ்க்காணும் பாடலில் சங்கப்புலவர் குறிப்பிட்டுள்ளது பெரும் வியப்பை அளிக்கிறது.

**புள்ளி அம்பிணை உணீஇய உள்ளி**
**அறுமருப்பு ஒழித்த தலைய தோல்பொதி**
**மறுமருப்பு இளங் கோடு அதிரக் கூஉம்** (அகம் 291)

உதிர்ந்த கொம்பை 'அறுமருப்பு' என்றும், திரும்ப முளைக்கும் கொம்பை 'மறுமருப்பு' என்றும் இப்பாடலில் அழைத்திருப்பது பாராட்டத்தக்கது என்று 'சங்கஇலக்கியத்தில் அறிவியற் கலை' நூலின் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். கலைமானின் கொம்பு முளைப்பதும், கிளை விடுவதும், வளர்வதும், உதிர்ப்பதும், திரும்ப முளைப்பதும் ஆகிய செயல்களைத் தற்காலத்தில் ஆராய்ந்து எழுதியுள்ளார்கள்.

**சங்கஇலக்கியத்தில் புலிகள் பற்றிய செய்திகள்:**

புலி வெயிலின் கொடுமையைத் தாங்கக் கூடியதன்று என விலங்கியல் வல்லுநர்கள் கூறுவர். அதனால் பகலில் பெரும்பாலும் கற்குகைகளிலும், புதர் நிறைந்த கற்பிளப்புகளிலும் பதுங்கிக் கிடக்கும் என்பர். சங்க இலக்கியத்தில் பல பாடல்களில் புலி தங்குமிடம், பதுங்குமிடம் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

**கல்லளைச் செறிந்த வள்ளுகிர்ப் பிணவு** (நற்றிணை148)

**புலிசேர்ந்து போகிய கல்லளைப் போல** (புறம் : 86)

புலி பதுங்கி இருந்து தாக்கும்போது பெரும்பாலும் இரையாகும் விலங்குகளைக் கழுத்தைப் கடித்து, முறித்துக் கீழே விழச் செய்யும் என்று விலங்கு நூலார் கூறுவர். கழுத்தின் அடிப்பாகமான தொண்டையைக் கவ்வும்போது எந்த விலங்கும் தப்பித்து ஓடுவது அரிது.

**கறுழ்பொருத செவ்வாயான்**

**எருத்து வவ்விய புலிபோன்ற** (புறம் : 4)

என்ற புறநானூற்றுப் பாடலில் மான் முதலியவற்றின் கழுத்தைக் கவ்வி உதிரம் உவற்றியுண்ட புலியைப் பற்றிக் கூறப்பட்டிருக்கின்றது. ( சங்க இலக்கியத்தில் விலங்கின விளக்கம் ப.232)

யானையின் குட்டிகளையே பெரும்பாலும் புலிகள் கொன்று கவரும் என்று விலங்கு நூலார் கூறுவர். இந்தச் செய்தியை ஐங்குறுநூறு 216ஆம் பாடலில் புலி பெண்யானை ஈன்ற கன்றைத் தூக்கிக் கொண்டு செல்வதைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

**குறுங்கை யிரும்புலிக் கோள்வ லேற்றை**
**நெடும்புகதற் கானத்து மடப்பிட யீன்**
**நடுங்கநடைக் குழவி கொளீஇய பலவின்**

**பழந்தூங்கு கொழுநிழ லொளிக்கு நாடற்கு** (ஐங்குறுநூறு 216)

சங்கஇலக்கியத்தில் சில பாடல்களில் புலி யானையைக் கொன்றதாகப் பாடப் பட்டுள்ளது. சில பாடல்களில் யானை புலியைக் கொன்றதாகப் பாடப்பட்டுள்ளது. சில பாடல்களில் யானையும், புலியும் போரிட்டு ஒன்றையொன்று வெல்ல முடியாது வலிமையிழந்து புண்களுடன் போவதாக சங்கப் புலவர்கள் பாடியுள்ளனர். இந்த மூன்று செய்திகளை விலங்கு நூலாரும் தற்போது கண்டறிந்து செய்தி வெளியிட்டுள்ளனர்.

**கொடுங்கேழ் இரும்புற நடுங்கக் குத்திப்**

**புலிவிளை யாடிய புலவுநாறு வேழத்தின்**

**தலைமருப் பேய்ப்ப கடைமணி சிவந்தநின்** (நற்றிணை : 39)

மேற்கூறிய பாடலில் புலியை விளையாடிய யானையைப் பற்றிக் கூறியிருப்பது அரிய செய்தியாகும். புலியை எளிதில் கொன்ற யானையையே புலவர் இவ்வாறு பாடியுள்ளார். புலியைக் கொன்று வென்ற யானையைப் பற்றி அகநானூற்றுப் பாடல்கள் 202, 272, 307, 332 கூறுகின்றன. தொல்காப்பியத்தில் தடுமாறு என்ற பொருளில் வரும் தொழிற்பெயருக்கு எடுத்துக்காட்டாக உரையாசிரியர்கள் '**புலி கொன்ற யானை", "புலி கொல் யானை"** என்ற தொடர்களைக் கூறியிருக்கின்றனர். விலங்கு நூலாரும் இதை உண்மை என கூறுகின்றனர். தொல்காப்பியரே இலக்கணம் வகுத்ததைக் கருதுங்கால் பழந்தமிழரின் அறிவாற்றலைப் போற்றாதிருக்க முடியாது.

**சங்க இலக்கியத்தில் யானைக்கொம்பு பற்றிய செய்திகள்:**

யானை தன் கொம்பால் புலியைக் கொன்றுவிட்டு தன் கொம்பையும், உடலையும் கழுவிக் கொள்வதைச் சங்ககாலப் புலவர்கள் கீழ்க்காணும் பாடல்களில் கூறியுள்ளனர்.

**உழுவையொடு உழந்த உயங்கு நடை ஒருத்தல்**

**நெடுவகிர் விழுப்புண் கழாஅக் கங்குல்** (அகம் 308)

**இரும்புலி தொலைத்த பெருங்கை வேழத்துப்**
**புலவுநாறு புகர்நுதல் கழுவக் கங்குல்**
**அருவி தந்த அணங்குடை நெடுங்கோட்டு** (அகம் 272)

இது காட்டு யானையின் செயலாகும். சங்கப் பாடல்களில் புலவர்கள் உவமைகள் வாயிலாகவும், வர்ணனைகள் வாயிலாகவும் படம்பிடித்துக் காட்டியதையே விலங்குநூலாரும் யானையின் செயலாகக் குறிப்பிடுகின்றனர்.

**சங்கஇலக்கியத்தில் குரங்கு பற்றிய செய்திகள்:**

தமிழ்நாட்டில் எங்கும் காணக்கூடிய, மக்களிடம் நெருங்கிப் பழகும் குரங்கு வகையைச் சங்க இலக்கியத்தில் 'செம்முகமந்தி' என்று அழைக்கப்படுகின்றது. குரங்குகள் மனிதர் சோர்வுற்றிருந்த காலத்தில் உணவுப் பொருளைக் கவர்வதைப் பற்றிக் குறுந்தொகைப் பாடலில் கூறுவதிலிருந்து சங்க காலத்திலேயே மனிதருடன் பழகிய குரங்கு வகை இது என்பது புரிகின்றது.

**இருங்கல் வியலறைச் செந்தினைப் பரப்பிச்**
**சுனைப்பாய் சோர்விடை நோக்கிச் சினையிழிந்து**
**பைங்கண் மந்தி பார்ப்போடு கவரும்** (குறுந் 335)

பாறையில் காயவைத்த திணையை மகளிர் நீராடும்போது குட்டிகளுடன் கவர்ந்ததாக குறுந்தொகையில் கூறப்பட்டுள்ளது. தற்காலத்தில் விலங்குநூலார் ஆராய்ந்ததில் மற்றவகைக் குரங்குகள் மனிதர்களுடன் நெருங்கிப் பழகாதவை என்றும் இக்குரங்கு வகை மட்டுமே மக்களிடம் நெருங்கிப் பழகும் எனக் கண்டறிந்து வெளியிட்டுள்ளனர். தமிழ்நாட்டில் காணப்படும் செம்முகமந்தி, முசு, கணக்கலை, ஊகம் போன்ற நான்கு வகைக் குரங்கினங்களைப் பற்றி சங்க நூல்களில் தெளிவாகவும், நுட்பமாகவும் கூறப் பட்டுள்ளதைக் காணும்போது பெரும் வியப்பெழுகிறது.

**சங்கஇலக்கியத்தில் நாரையின் தூவி பற்றிய செய்திகள்:**

நாரையினப் பறவைகளுக்கு மார்புப் பக்கத்திலும், பின்பக்கத்திலும் உள்ள இறகுகளில் மிகச் சிறிய, நுண்ணிய துய் போன்ற தூவிகள் காணப்படுகின்றன. அவற்றிலிருந்து ஒருவகைத் தூள் போன்ற பொருள் வெளியாகின்றது. அந்தத் தூளைக் கொண்டு இறகுகளை உலர்த்திக் கொள்ளும் வழக்கம் இப்பறவைகளுக்கு உண்டு என்பதை அறிவியல் அறிஞர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

**ஆடமை ஆக்கம் ஐதுபிசைந்து அன்ன**
**தோடமைத் தூவித் தடந்தாள் நாரை** (நற்.178)

மூங்கிலிலிருந்து உரிக்கப்படும் தோலை மெல்லியதாகப் பிசைந்து வைத்தால் ஒத்த தூவியை உடைய நாரை என்று நற்றிணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. தடந்தாள் நாரை என்பது நாரை இனத்தைச் சேர்ந்தது. நாரைக்குத் தூவியுண்டு என்பது தற்போது அறிவியலார் கண்டுபிடித்தது. இத்தகைய நுட்பமான அறிவியல் செய்திகளை ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சங்கப் புலவர்கள் கூறியதன் வாயிலாக அவர்களின் அறிவாற்றலை அறிய முடிகின்றது. (சங்கஇலக்கியத்தில் அறிவியற்கலை ப.26)

**முடிவுரை:**

சங்க இலக்கியத்தில் முப்பதுக்கும் மிகுதியான விலங்கினங்கள் கூறப்பட்டுள்ளன. அன்றைய தமிழகத்துக்கு அப்பாற்பட்ட நாட்டில் கண்ட விலங்குகளையும், பறவைகளையும் கூட சங்கஇலக்கியத்தில்

பாடியிருப்பது வியப்பை ஏற்படுத்துகிறது. ஊர்வன, பூச்சி இனங்கள் பற்றிய செய்திகளும் சங்க இலக்கியத்தில் இடம்பெற்றுள்ளன. இவை அனைத்தும் தற்கால அறிவியலார் கண்டுபிடிப்புகளோடு ஒத்துப்போகின்றன. சங்கப் புலவர்கள் தங்களுடைய தனித்தனி அனுபவத்தைப் பாட்டில் புகுத்தி அதைப் பொதுச் சொத்தாகத் தமிழருக்குத் தந்தமை போற்றத்தக்கது. தமிழர் வாழ்வின் பண்பாட்டுச் சின்னமாகத் திகழ்கின்ற சங்கஇலக்கியங்களைப் போற்றிப் பாதுகாத்து வருங்காலத் தலைமுறையினருக்கு அதன் அருமை பெருமைகளை உணர்த்தி வழங்க வேண்டும்.

**துணைநூல் பட்டியல்:**


1. சங்கஇலக்கியத்தில் விலங்கின விளக்கம், பி.எல்.சாமி, பி.எஸ்ஸி, ஆகஸ்ட் 1970, அப்பர் அச்சகம், மெட்ராஸ் - 600 001.
2. சங்க இலக்கியத்தில் அறிவியற் கலை, பி.எல்.சாமி, ஐ.ஏ.எஸ்.(ஓய்வு), டிசம்பர் 1991, அமுதன் அச்சகம், 66, பெரியார் தெரு, எம்.ஜி.ஆர். நகர், சென்னை - 600 078